ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் இரத்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள்

[டாக்டர் க. பொன்முடி] [2008 மே 14

இங்கே உரையாற்றுகிறபொழுது, அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Government Polytechnics) பயில்கிற மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை இரத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதற்கு அனுமதியளித்து, 2008-2009 ஆம் கல்வியாண்டு முதல் அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் ரூ.2,500 இரத்து செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு முதல்வர் அவர்களின்சார்பாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு தமிழ்நாடு முழுவதிலும் இந்தப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலக்கூடிய மாணவர்கள், பெற்றோர்களின் சார்பில் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஏ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதிப்பீட்டுக் குழு. 2008-2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் 16 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. மு. அப்பாவு

செல்வி ஆ. அங்கையற்கண்ணி

திரு. தா. உதயசூரியன்

திரு. இ.ஏ.பி. சிவாஜி

திரு. அ. தமிழரசு